1971 ஜூலை 13]

தொழிற்சாலைகளை அமைக்கும்போது அதிக அளவில் அமைக்கலாம் என்று நாம் இருக்கிறோம். நம்முடைய அரசுத் துறையில்கூட, விண்ணமங்கலத்திலேயே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு இதுபோன்று லெதர் குட்ஸ் செய்யலாமா, அதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெறலாமா என்ற முயற்சிகளையும் நாம் எடுத்து வருகிறோம்.

Leather Factory at Wallajapet

* 216 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Inustries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a leather factory at Wallajapet in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதை அரசு உணருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லெதர் பாக்டரிகள்—தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏராளமாகத் தமிழ்நாட்டில் இருக்கின்றன. நாமும் விண்ணமங்கலத்தில் வைத்திருக்கிறோம். லெதர் பாக்டரியை வாலாஜாவில் வைப்பதைப்பற்றித்தான் நான் சொன்னேன்.

திரு. கே. ஏ. வகாப் : வாலாஜாபேட்டையிலும் அதன் அருகில் இராணிப்பேட்டையிலும் ஏராளமான தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன. அவை சில நேரங்களில் நவீன முறையில் இல்லாமையினால் அங்கே சுகாதாரக் கேடான முறையில் இருக்கின்றன. ஆகவே, நவீன முறையில் தொழில் கூட்டுறவுத் துறையில் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்க இந்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவாளர்கள் முயற்சித்தால் உதவி செய்யலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய நீதிமன்றங்கள்

* 217 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு சப்-கோர்ட்டும் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) இம்மாவட்டத்தில், நடப்பு ஆண்டில் வேறு எந்தெந்த இடங்களில் நீதி மன்றங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு நிறுவுவதற்கான பிரேரணை இம்மாநிலத்திலுள்ள சிவில், கிரிமினல் நீதி மன்றங்களின் அதிகார வரம்பை நிர்ணயிப்பதற்காக